
பு. சு. நாராயணதாசர் இயற்றிய

# ஸ்ரீபண்டரிகீர்த்தனைக

பண்டரிபுர வைபவம் நாமாவளியும்



20 JUL 1947

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்

1947 [விலை அணா 6

ராயப்பிள்ளை வீதி; சென்னை.

M.S. 259 (16-7-47) Wrapper 2000 Cps.

Q23:417
N47
102136

# பண்டரிபுர க்ஷேத்திர வைபவ

தமிழ்ப்பண்டிதர்

**டி. சி. பார்த்தசாரதி அய்யங்கார் எழுதியது**

பதிப்புரிமை] ——— [செய்தது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" "மாத்ரு தேவோபவ, பித்ரு தேவோபவ" என்பவற்றின் உண்மையான தர்மத்தைக் கடைப்பிடித்து நடக்க வழியறியாது தீமைச் செயல்களில் அல்லும் பகலும் உழன்றுழன்று உலவித்திரிந்து, தன்பிதா மாதாவைப் பிரிந்து பத்தினியாகிய சித்திணியின் மையலிற் சிக்கிச் சீர்மையும் நேர்மையும் இழந்து இறைவன் வழிபாடு உண்டென்பதைக் கனவினுங் கருதாமல் இல்லறமே நல்லறமெனவும், துன்பமே இன்பமெனவும் நினைத்து வாழ்நாள் கழித்தான் பண்டிரன் என்னும் அந்தணனொருவன். அவ்வந்தணனுக்கு இல்லக்கிழத்தியாக வமைந்த பெண்டிர் சிகாமணியோ தன்னில்லத்துற்ற பணிகளை நடத்துங் கடமைகளில் தலைமை தாங்கிச் செய்வதும் அல்லாமல், தன்னைத் தாரமாக்கிக்கொண்ட கணவனுக்கும் நல்லமைச்சுபோலாகியும் இருந்துவந்தாள்.

இங்ஙனம் சின்னாட்கள் செல்ல, ஒருநாள் அப்பெண்கள் நாயகம் தன் கணவனை நோக்கி, சுவாமி! நீர் அறியாதொன்றுமில்லை; ஆயினும் உமது செய்கைகள் பூர்வ கன்மத்தால் தர்மத்தைத் தவிர்ந்து அதர்மக் குகையில் புகுந்து அவதிப்படுகின்றது. அதனைப் போக்கிக் கொள்ளுவதற்கு அடியாள் சொல்லும் அருஞ்செயல் ஒன்றுளது. அச்செயல் எளியளால் கண்டனவல்ல. நம் பெரியோர்களாலும், முற்றுந் துறந்த முனிவர்களாலும் கண்டனவேயாம். பிணிவாய்ப்பட்டுக் கிடந்துழன்று வருந்தித் துடித்துக்கொண்டிருக்கும் நோயாளொருவன், அந்நோய் போக்குண்டு சுகம் அடைய முயன்று, இறுதியாக வொரு கைவன்மை மிக்க மருத்துவனை அடைந்து தன் நோய் தீர்த்துக்கொள்வதைப் போலத் தாமும் புராணபடனம் நடக்குமிடஞ் சென்று நும் துன்பத்தைப் போக்கிக்கொண்டு வாழ்க்கை

(தொடர்ச்சி ராப்பர் உட்புறம் பார்க்க.)

கிடைக்குமிடம் :—

தேவானந்தசுவாமி

குகை ஆஸ்ரமம்

மகாதேவமலே

காங்குப்பம்

குடியாத்தம் தாலுகா

வட ஆற்காடு.

பொழிப்பு: 'தலைவனே! அடியார்கட்கு எளிமையில் கிடைக்கும் பொருளே! உண்மையானவனே! அயனும் திருமாலும் கண்டறிய முடியாத குற்றமற்றவனே! தூய்மைக்குப் பிறப்பிடமே! நந்திமேலேறும் ஒளியுடையாய்! இந்த மாவுலகத்தில் வாழ்பவர் யாவரும் வணங்கிநிற்கும் மாதேவநாதா'! என்றிவ்வாறு பலவும் கூறி தேவேந்திரன் வணங்கினன் என்றவாறு

27. இப்படி தோத்திரங்கள் இயம்பியே இருந்த போது
அப்பணி சடையும் நீறும் அழகுவெண் மதிதரித்து
செப்பமாம் விடைமேலேறி செழுங்கலை மழுவு மேந்தி
மைப்படி குழலாளோடும் வள்ளலார் மகிழ்ந்து வந்தார்.

பொழிப்பு: இவ்வாறாக இந்திரன் தோத்திரங்கள் கூறித் தொழுது வணங்கிக் கொண்டிருக்கும் நாளில், கங்கையணிந்த சடையையும், திருவெண்ணீற்றையும், அழகிய வெள்ளிய சந்திரனையும் பூண்டு, செம்மைப்பட்ட நந்தியின் மேலேறிக் கொண்டு, மானும் மழுவும் கையிலேந்திக் கொண்டு, மேகத்தை யொத்த கூந்தலையுடைய உமையம்மையுடன் வந்து, அருள் வள்ளலாகிய சிவபெருமான் மனமகிழ்ச்சி கொண்டு காட்சியளிக்க வந்தார் என்றவாறு.

28. ஆதியே போற்றி நின்பொன்
னடிபோற்றி அன்பர்க் கெல்லாம்
வேதனை தவிர்த்துச் செல்வம்
விளங்கிட விதிப்பாய் போற்றி
சோதிசேர் விடையி லேறும்
சொரூபனே போற்றி போற்றி
மாதிட பாகம் வைத்த மகதேவ நாதா போற்றி.

பொழிப்பு: 'எல்லா உலகங்கட்கெல்லாம் முதல்வனே! நின் திருவடிகளைத் தொழுது வணங்கும் அடியார்கட்கெல்லாம் துன்பம் தவிர்த்துச் செல்வம் பல வளிப்பவனே! ஒளி பொருந்திய நந்திமேல் ஏறும் வடிவனே! மாதாகிய பார்வதியை இடபாகத்தே வைத்த மாதேவனே, போற்றி! போற்றி!' என்று தேவேந்திரன் வந்தித்தான் என்றவாறு.

29. அம்மையே போற்றி மிக்க
அகிலமீன் றவளே போற்றி
செம்மையா யுலக மெல்லாம்
செழித்திட வடியார்க் கெல்லாம்
இம்மையில் வாழ்வும் பின்னும்
இணையடி தருவாய் போற்றி
நம்மையாள் காம கோட்ட
நாயகி போற்றி போற்றி.

பொழிப்பு: தாயே! இவ்வுலக மெல்லாம் ஈன்றவளே! உலகஞ் செழிக்கவும், அடியார்கட்கு இம்மையில் இன்ப வாழ்வும், மறுமையில் உன் திருவடி வாழ்வும் தருபவளே! என்னையும் ஆண்டருளும் காமகோட்டித் தலைவியே! போற்றி! போற்றி! என்று மேலும் தேவேந்திரன் தோத்திரம் செய்தான் என்றவாறு.

30. சீருலவு மகவான் கேளுமினி சித்திரைமுன்
திங்கள் தன்னில்
வாருலவு பூமுலையாள் திருமலையை வலமாக
வந்தோர்க் கெல்லாம்
பேருலவு மனிதர்கள் புகழ்ந்திருக்க வரந்தருவோம்
பிறப்ப றுப்போம்
பாருலகில் மூவேழு தலைமுறைக்கு முத்திவரம்
தருவோ மென்றார்

பொழிப்பு: 'அழகு பொருந்தும் இந்திரனே! கேளும்; சித்திரைத் திங்களில் வரும் முன் திங்கட்கிழமைகளில், கச்சணிமுலையாளாகிய உமையின் திருமலையாகிய இம் மாதேவமலையை வலமாக வந்தபேர்க்கு, பாரில் பல மனிதர்களும் புகழத்தக்க வரத்தை நாம் கொடுப்போம்; அதுவுமன்றி அவ்வடியார்களின் பிறவித்துன்பத்தையும் அறவே நீக்குவோம்; அத்தோடன்றி அவர்கள் தொடங்கி இருபத்தொரு தலைமுறைகள் வரையில் முத்தி கொடுத்தருள்வோம்' என்றார் என்றவாறு.

31. மலையன் தன் புதல்வியந்த மாமலையாய் விளங்கிடும்
மகிமை யாலே
உலகமுள்ள தலங்களிலும் அதிகமதாய் நாமிருக்க
உகந்த தாகும்
வலம்வருவோர் நினைத்ததெலாம் கைகூடும் வினையகலும்
மகிமை யுண்டாம் [வாழ்வு
அலைமகளார் பெருவாழ்வும் அளகையர்கோன் பெரு
மளிப்போ மென்றார்.

பொழிப்பு: மேலும் எம்பெருமானார் கூறுவார்: 'இமவானின் மகளாகிய பார்வதி இந்தச் சிறந்தமலையாக உருவெடுத்து வந்திருக்கும் அற்புதத்தால்; இது உலகிலுள்ள எல்லா தலங்களிலும் சிறந்ததாம் அதுவுமன்றி நாமும் இங்கே விரும்பி இருக்கத் தக்கதாம்; அன்றியும் இதை வலம் வருவோர் நினைத்தவையெல்லாம் கைகூடும்; அவர்கள் பாவங்கள் போம்; பெருமையுண்டாகும்; திருப்பாற்கடலில் எழுந்த இலக்குமியின் செல்வ வாழ்வும், அளகாபுரத்தரசனாகிய குபேரனின் செல்வ வளமும் பெற்று வாழும்படி வரங்களளிப்போம், என்றார் என்றவாறு.

32. இந்தவகை யளித்திடுவோம் புரந்தரனே ஐயமிலை
இந்த வெற்பை
வந்தவர்கள் வாழ்வுபெற லிங்கவுரு வாகவெதிர்
வடிவே செய்தோம்
விந்தைபெறு நம்முடைய திருவடிகள் மீதில்மன
மிகுத்த பேர்க்கு
பந்தவினை யகற்றியுயர் பரிவாக வழிநான்கும்
பகர்வோ மென்றார்'

பொழிப்பு: எம்பெருமான் மேலும் 'இவ்வாறாக யாம் வரமளிப்போம்! இன்னும் கேளும்; இந்திரனே! இந்த மகாதேவ மலைக்கு வந்தவர்கள் பெருவாழ்வு பெறுவான்வேண்டி, யாம் இங்கே இலிங்க வடிவுடன் இருக்கிறோம்! புதுமைமிகும் நம்முடைய திருவடிகள் மீது அன்பாயிருக்கும் பேர்களுக்கு, பாசபந்த வினைகளை நீக்கி, உயர்ந்த அன்போடு நம்மையடையும் நான்கு வழிகளையும் கூறுவோம்' என்றார் என்றவாறு.

33. நந்தவனம் செய்தலும் மலரெடுத்தல் நன்மைபெறு
பல பணிகள் நலமாய்ச் செய்தல்
விந்தைபெறும் நாமிருக்கு மாலயத்தை
மெழுகிடுதல் விளக்கிடுதல் மிகவே போற்றல்
சிந்தைமிகு மடியார்கள் நம்மே லன்பாய்
சிவசொரூப மெடுத்தவர்கள் திருத்தாள் போற்றல்
இந்தவகை சரியைதொழில் செய்தா ரெல்லாம்
எமதருகில் சாலோகத் திருப்பா ரென்றார்.

பொழிப்பு: மேலும் எம்பெருமான், 'எங்கும் பூங்காக்களை எடுத்தவர்களும், மலரெடுத்துத் தொடுத்துவந்தவர்களும், மற்ற எமக்குரிய பணிவிடைகளைச் செய்தவர்களும், அழகுமிக்க நம் மாலயத்தை மெழுகினவர்களும், நமக்கு விளக்கிட்டவர்களும், மிகுதியாக நம்மைத் துதித்தவர்களும், சிவன் வடிவம் என்னும் முறையில் நம் வடிவத்தை மேற்கொண்டவர்களின் திருவடிகளைப் போற்றினவர்களும், இவ்வாறு சரியைப் பணிகளைச் செய்தவர்கள் யாவரும் எம் கயிலாயத்தில் சாலோக பதவியி லிருப்பார்கள்' என்றார் என்றவாறு.

34. வாசமுள மலரெடுத்துப் புனிதமான மஞ்சனமும்
மற்றுமுள்ள வகைகள் கொண்டு
பாசமற நினைவகற்றி நானம் செய்து பண்புபெற
நீறணிந்து பருவஞ் செய்து
நேசமுற எம்முருவம் பூசை செய்து நேர்மையதாய்
வாக்கிலவர் நிந்தை யற்று
ஆசையுற கிரியைதொழில் செய்தார்க் கெல்லாம்
அன்புடனே சாமீபம் அருள்வோ மென்றார்.

பொழிப்பு: மேலும் எம்பெருமான், 'மலர் கொண்டு பூசித்து, நம்மைத் திருமஞ்சன மாட்டி, மற்றுமுள்ள பூசை முறைகளையும் மேற்கொண்டு, உலகத்தாசை நீங்க, எல்லா நினைவையும் நீக்கி, நீர்குளித்து, வெண்ணீறு பூசி, நேம நிட்டைகளைச் செய்து முடித்து, அன்பு பொருந்த எம் மடிமைப் பூசை செய்து, அறங்கலந்த நற்சொல்லினராய் பழிகளை நீக்கி, இவ்வாறாகக் கிரியைப் பணிகளெல்லாம் செய்த பேர்களுக்கு நாம் 'சாமீப பதவியை' அளித்தருள்வோ மென்றார் என்றவாறு.

35. ஐவகையு முக்குண மூ மடக்கிப் பின்பு வாதார
        கணபதியின் அடியைப் போற்றி
    மெய்மனமென் னுதாரம் கடந்து மேவி மேலிருக்கும்
        பொய்கைதனில் மிகுந்து மூழ்கி [ச்
    செய்வகையாய் பரவெளியிற் சென்று கூடித் திருநடன
        சிலம்பொலியைச் சேர வல்லோர் [கில்
    இவ்வகையாய் யோகநிலை செய்தோர்க்கெல்லாம் எமதரு
        சாரூபத் திருப்ப ரென்றார்.

பொழிப்பு: மேலும் எம்பெருமான் 'அகங்காரம், கோபம் அபிமானம், ஆசை, வினை ஆகிய ஐவகைத்தன்மைகளையும், ராஜசம், தாமசம், சத்துவம் என்னும் முக்குணங்களையும் அடக்கி, மூலாதாரமான விநாயகப் பெருமானின் திருவடி களைப் போற்றி செய்து, உடம்பும் மனமும் என்று சொல்லப் பட்ட ஆறுதாரங்களைக் கடந்து சென்று, அதன்மேலிருக்கும் ஞானத்தடாகத்தில் மூழ்கி, எம்பெருமானரின் திருநடனஞ் செய்யும் ஒலியைக் கேட்கவல்ல யோகநிலையிலிருந்த வடியார் கள் சாரூப பதவியிலே இருப்பார்' என்றார் என்றவாறு.

36. ஆறுவகை சாத்திரமும் கலைக்கி யானங்கள் ஆகமங்கள்
        ஏழுநான் கினைத்தும் முற்றி
    ஆறுபெறும் தத்துவமும் விளக்கம் எல்லாம் அவர்வருந்தி
        மாய்கைமன மகற்றிப் பின்பு
    தேறிசிவ கதையுணர்ந்து தீதை நீங்கி திருவடிமீ
        தினில்நன்றே சிந்தை யாகும்
    தாரணியோர் ஞானநிலை யாக நின்றால் தகைமைமிகு
        சாயுச்சியந் தருவோ மென்றார்.

பொழிப்பு: 'ஆறுவகைச்சமய சாத்திரங்களையும், அறு பத்துநான்கு கலைகளையும், ஆகமங்களிருபத்தெட்டையும் மற் றும் வியப்பு தரும் தத்துவங்களையும் அவற்றின் விளக்கங் களையும் ஆகிய இவைகளையெல்லாம் வருந்திக்கற்று, மாய மனம் நீங்கி, தெளிந்து, சிவகதை உணர்ந்து, குற்றம் யாவற் றையும் நீங்கி, நம்திருவடிகள்மீது நன்றாக என்றும் நினைவாக இருக்கும் ஞான நிலை யடைந்த மனிதர்களுக்கு 'சாயுச்சிய பதவிகளை அளிப்போம்' என்றார் எம்பெருமானர் என்றவாறு.

37. இத்தகைமை யுரைத்திடும்போ தடிவ ணங்கி
 இனியதொன் றுநாயடியே னிசைப்பல் கேளும்
உத்தமனே! அடியார்கள் பேறுஞ் சேர
 உரைத்திடவே மனங்களித்தே னுண்மை யானேன்
மற்றுமிந்த பூதரமும் பிரள யத்தின்
 வரலாறு மடியேற்கு வகுப்பா யென்று
சித்தர்கள் நாயகனே உமையாள் பாக
 திருவுளங்கள் களிகூர்ந்து செப்பாய் என்றார்.

பொழிப்பு: இவ்வாறாக எம்பெருமான் கூறியபோது தேவேந்திரன் அவர்தம் திருப்பாதங்களை வணங்கி, 'நாயினும், அடிமையாகிய யான் மகிழ்ச்சிக் குரியதொன்று கேட்பேன்; ஐயனே! கேட்டருளும்; உத்தமனே! அடியார்கட்குத்தாங்கள் அளிக்கும் பதவிகளைக் கேட்டு மனங்களித்து உண்மையின் வசமானேன்: இனியும் இந்த மகதேவமலை யுகப்பிரளய காலத்தில் யாதாகுமோ? அவ்வரலாற்றை அடியேனுக்குத் திருவுள மிசைப்பாய்' என்று கூறி, 'சித்தர்கட்கெல்லாம் தலைமையான சித்தனே! உமையாளின் பாகனே! செப்பி யருளும்' என்றான் என்றவாறு.

38. புரந்தரனே கேளுமினி உலகமெலாம் புனல்நிறைந்து
 போகும் போது
பெருந்தகையாய் இந்தமலை யுடியுமண்ட கோளகைக்கும்
 பெண்ண தாகி
சிரந்தனிலே சிவலிங்க உருவெடுத்து ஈசான்யத்
 தெதிராய் நிற்கும்
வருந்தகைமை புனல்நீங்க இந்தப்படி விளங்கிவர
 மளிக்கு மென்றார்.

பொழிப்பு: அதற்கெம்பிரான் 'தேவேந்திரனே! கேட்பா யாக: இவ்வுலக மெலாம் வெள்ளம் நிறைந்து காணும்போது, பெரிய தகைமை யுடையவனே! கேள்; இம்மலையின் அடிமுதல் அண்டமுகடுவரையில் பெண்ணுருவங்கொண்டு நின்று, தலையில் சிவலிங்க உருவமாகித் தோன்றிநிற்கும்; அவ்வூழி வெள்ளம் நீங்கினல் திரும்பவும் பழையபடி மலையாகிப் பூவுலக மக்களுக்கு வரமளிக்கும்' என்றார் என்றவாறு.

39. அம்மொழிகேட் டடிவணங்கி யானந்த பரவசமா
யானே னென்று
இம்மலையின் வரலாறு எமக்குமறி வித்தாய்
எந்தை நாதா
நன்மைமிகு மிக்கழுக்க ளெந்நாளு மிருந்திடுமோ
நலிந்து போமோ
செம்மையதாய் விடையேறும் நாயகனே மனமகிழ்ந்து
செப்பு மென்றார்.

பொழிப்பு : அவ்வாறு எம்பெருமான் கூறியதைக் கேட்டு தேவேந்திரன், அவர் திருவடிகளை வணங்கி, 'ஆனந்தத்தால் பரவச மானேன்' னென்றும், 'என் தந்தையே! தலைவனே! இம்மலையின் வரலாற்றை எனக்கு நன்றாக விளங்க அறிவித்தாய்; ஆனாலும், இந்தக்கழுகள் எந்நாளும் உயிருடன் இருக்குமோ? அன்றி இறந்து போகுமோ? செவ்வையாக நந்திமேல் ஏறியருளும் நாயகரே! இதைவிளங்கக் கூறத் திருவுளமிசைப்பீராக' வென்றும் தேவேந்திரன் வேண்டினான் என்றவாறு.

40. அவ்வுரைகேட் டரன்மகிழ்ந்து புரந்தரனே இவ்விரண்டு
மழிவில் லாது
இவ்வுலக முள்ளளவு மிக்கருந்தி பின்புலக
மிறக்கும் போது
செவ்வைபெறு நமதடிகள் சேர்ந்துவிடும் பின்புலகஞ்
செழிக்கும் போது
இவ்வகையே புவிவிளங்கப் பலியருந்தி யிருக்குமென்று
விளம்பி னாரே.

பொழிப்பு : தேவேந்திரன் கேட்ட வினாவிற்குச் சிவ பெருமானும் மனமகிழ்ந்து 'தேவேந்திரனே! இக்கழுகுக ளிரண்டும் உலகமழியும்வரையில் இவ்வாறே யிருந்து, அழியும் போது நம்திருவடிகளில் வந்தடைந்து, பின்பிறக்கும் போது இவ்வாறே இவை தோன்றி இம்மலையில் பிரசாதம் அருந்திக் கொண்டிருக்கும்' என்றார் என்றவாறு.

41. இம்மலையே வலமாகி மானிடர்கள் நமதுருவம்
எடுத்த பேர்க்கு
செம்மைருத்தி ராக்கமனம் திருநீறு மாலைகள்
திருந்துஞ் செச்சை
ஐம்மணியு மற்றுமுள சோடசங்கள் நடப்பித்தோ
ரிடந்தந் தோர்கள்
மும்மலத்தின் மருணீங்கிப்பிரியாமல் எமதருகில்
முத்தி சேர்வார்.

பொழிப்பு:மேலும் எம்பெருமான் 'இம்மாதேவ மலையை வலமாக வந்தமானிடர்கள், நம்முடைய வடிவத்தை எடுத்த அடியார்கட்கு உருத்திராக்கம், சோறு, திருநீறு, மலர் மாலைகள், சட்டைகள், ஐம்முகமணிகள் ஆகிய இவைகளை அளித்து அறுவகைப் பணிகளையும் செய்து, இருக்க இடம் அளித்தால், ஆணவம், மாயை, கர்மம் ஆகிய மும்மலங்களினின்றும் நீங்கப் பெற்று, எம்மிடத்தினின்றும் பிரியாமல் முத்திதனில் சேர்வார்கள்' என்றார் என்றவாறு.

42. மதிநதி யணிந்த நாதர் மகபதி தன்னை நோக்கி
பதிகளில் மகிமை யாமிப் பதிவல மானு யதனல்
அதிகமாய் உனது வாழ்வுக் கழிவிலா தருளிச் செய்தோம்
ததியுல கவர்க்கு மிந்த தகைமையே தருவோ மென்றார்.

பொழிப்பு : பிறையுங் கங்கையு மணிந்த எம்பெருமானர் இந்திரனை நோக்கி, 'பூலோக தலங்களில் மிப்புகழ் பெற்ற இம்மாதேவ மலையை வந்து வலமாகவந்தால், உன்வாழ்வுக்கு அழிவில்லாமல் அருள் கொடுத்தோம்; அழியும் பருவமுடைய இப்பூவுலக மக்களும் இம்மலையை வலமாக வந்தால் இம்முறையே வரங்கொடுப்போம்' என்றார்

43. எந்தையை வணக்கம் செய்து இனியவெற்
பதனை நீங்கிச்
சிந்தையா யமர ரெல்லாம் திருவுளம்
சிறந்து சூழ
வந்திடும் படியே சென்று வானவர்
உலகில் சேர்ந்து
விந்தைசேர் சசியி னேடு மேன்மையாய்
வீற்றி ருந்தார்.

பொழிப்பு: பின்னர் தேவேந்திரன். அம்மாதேவ மலையை வணங்கி நீங்கி, தேவர்கள் புடைசூழ, வந்தவழி திரும்பி, வானவர் உலகடைந்து, இந்திராணியோடு பழையபடி வீற்றிருந்தான் என்றவாறு.

44. சிந்தை சூதர் மகிழ்ந்து சிறப்பொடு
நந்த வான நைமிசத் தோர்கட்
கிந்த வாறு மியம்பி யிருந்தபின்
விந்தை யாக மகிழ்ந்து விளம்புவார்.

பொழிப்பு: இவ்வாறாகச் சூதர் நைமிசாரணிய முனிவர்கள் யாவருக்கும் திருவாய் மலர்ந்தருளியபின், விநோதமாக மூறுவலித்து ஒன்று கூறுவாராயினர் என்றவாறு.

45. மாது நாயகர் மாமலை வண்மையை
வேத னுனு மாகாது விளம்பிட
ஆத லாலெவன் அருள்செய் வோமென
சூதர் வாமரை நோக்கியே சொல்லுவார்

பொழிப்பு: 'எம்பெருமானின் மாதேவ மலையின் பெருமையை அயனும் அறிவிக்க இயலாதெனின் யாம் மட்டும் எவ்வாறு கூறுவோம்' என்று சூதர் வாமரை நோக்கியே கூறலுற்றார் என்றவாறு.

46. சிந்தனைகள் கண்டுவிடும் தமிழறிவு நிலையனைத்தும்
சிறந்து தோன்றும்
பந்தவினை சூர்யவாரம் சுனைமூழ்கி நீறணிந்து
பரிவ தாக
எந்தனையாண் டருள்பவனே புரமெரித்த நாயகனே
ஈசா என்று
வந்தனையாய் மகதேவ மலையை வலமாக
வந்தோர்க் கென்றூர்.

பொழிப்பு: மேலும் சூதர் ஞாயிற்றுக்கிழமை தோறும் சுனையில் மூழ்கி, வெண்ணீறிட்டு, அன்போடு 'எம்மையாட்கொள்பவனே! திரிபுர மெரித்த தலைவனே! ஈசனே; என்றிவ்வாறுகத தோத்திரஞ் செய்து, இம்மகதேவமலையை வலமாக வந்தவர்கட்கு' ஆராய்ச்சியும் தமிழறிவும் மிகவாகத் தோன்றும் என்றவாறு.

47. பதிபெருகும் பதவிதரும் ஞானவினை களெல்லாம்
பறந்து நல்கும்
ததிமிகுநத சோமவாரம் தன்னிலே வரமளிக்கும்
தடத்தில் மூழ்கி
துதிபெருக நீறணிந்து சிவனடிமேல் அன்பாகித்
தோத்தி ரத்தால்
மதிதரிக்கு மகதேவ மாலையை வலமாக
வந்தோர்க் கென்றார்.

பொழிப்பு: மேலும்சூதர், 'தண்மை மிக்க திங்கட்கிழமை களில் நன்மை யளிக்கும் தடாகத்தில் குளித்து, நீராடி, திரு நீறணிந்து, எம்பெருமான் திருவடிகளைத் தோத்திரம் செய்து கொண்டே, வான் மதியைத் தானணுகும் வரையாகிய மகதேவ மலையைத் திருவலம் செய்து வருவோர்கட்கு, பெருஞ்செல்வ மிகும்; நன்னிலைகள் மிகுதியாகக் கொடுக்கும்; அறிவுச்செயல்க ளெல்லாம் விரைவில் சித்திக்கும்' என்றார் என்றவாறு.

48. பாவமறும் வினைநீங்கும் ஏழரைநாட் டுச்சனியன்
பறந்து நீங்கும்
தேவர்சுனை யதிலேமங் களவாரம் தனில்மூழ்கி
திருநீ றிட்டு
மேவுசிவ கதைபுகழ்ந்து மனமொருமை யாகியொரு
விரத மாக
சேவில்வரு மகதேவ மாலையை வலமாகச்
செய்தோர் கென்றார்

பொழிப்பு: மேலும் சூதர் 'செவ்வாய்க்கிழமை தோறும் இங்குள்ள சுனைமூழ்கி, நீறிட்டு, சிவகதைபேசி, நந்திமேல் வரும் மகதேவமலை வலமாக வந்தோர்க்கு பாவங்கள் நீங்கும்; தீவினைகள் நீங்கும்; ஏழரைநாட்டுச் சனியன் விரைந்துநீங்கும்' என்றார் என்றவாறு.

49\. திருவளிக்கும் கொலைநீங்கும் மானிடர்கள் புகழ்ந்திருக்கும்
சிறப்பு முண்டாம்
பெருவளிக்கும் புதவாரம் சுனைமூழ்கி நீறணிந்து
பெருமை யாக
ஒருவளிக்கும் மனதாகி மானிட றெந்நாளு
மொருமை யாகி
மருவளிக்கும் மகதேவ மாமலையை வலமாக
வந்தோர்க் கென்றூர்

பொழிப்பு: மேலும் சூதர், 'பெருமைமிக்க புதன்கிழமை களில் இங்குள்ள சுனைபடிந்து, நீறு பூசி, பெருமையாக ஒருமை மனதராய், ஒற்றுமைப்பட்டு, மருவுதல் பொருந்திய மகாதேவரின் திருமலையைத் திருவலம் புரிந்தோர்க்குச் செல்வ முண்டாகும்; தொலைப் பாதகம் நீங்கும்; உலகம் புகழும் புகழு முண்டாகும்' என்றூர் என்றவாறு.

50\. சத்துருக்கன் பகைநீங்கும் நினைத்ததெல்லாம் கைகூடும்
தன்மை மெத்த
பெற்றிருக்கும் குருவாரம் சுனைமூழ்கி நீறணிந்து
பெருமை யாக
உற்றிருக்கும் ஒருநினைவாய் மானிடர்கள் மிகவணங்கி
உமையாள் பாகம்
வைத்திருக்கும் மகதேவர் மாமலையை வலமாக
வந்தோர்க் கென்றூர்

பொழிப்பு: மேலும் சூதர், 'தண்ணிய வியாழக் கிழமை களில் சுனையாடி வெண்ணீறணிந்து பெருமைப்பட ஒருநினை வுள்ளவராகி வணங்கி, மாதோர் பாகரின் மலையாகிய அம்மகா தேவ மலையை வலம் புரிந்தோர்க்கு, பகைவர்களின் பகை நீங்கும்; நினைத்தவை கைகூடும்' என்றூர் என்றவாறு.

51\. தீதகலும் வினைநீங்கும் மைந்தர்களும் ஒருகோடி
திறமா யுண்டாம்
சூதகன்ற சுக்ரவாரம் தன்னிலே சுனைமூழ்கி
துதிகள் சாற்றி
ஓதியொரு மனதாகி மானிடர்கள் மனங்குளிர்ந்து
உகந்து மிக்க
மாதுபங்கர் மகதேவ மாமலையை வலமாக
வந்தோர்க் கென்றூர்.

பொழிப்பு :மேலும் சூதர்.'வஞ்சனைகள் நீங்கிய வெள்ளிக் கிழமைகள் தோறும் இங்குள்ள சுனைகுளித்து,எம்பெருமான் துதிகள் பாடி ஒருமைப்பட்டு புகழ்ந்து களித்து, மாதுபங்கரின் மகாதேவ மலையைத் திருவலம் வந்தபேர்கட்கு, தீமைகள் நீங் கும்; பாவங்கள் போகும்; கோடிமக்கட் பேறுண்டாம் என்றார் என்றவாறு

52. நன்மைவரும் செல்வமுண்டாம் நினைத்தகா ரியங்களெல் [லாம்
நலம தாகும்
தண்மைமிகு சனிவாரம் சுனைமூழ்கி நீறணிந்து
தகைமை யாக
அன்புபெறு சிவகதைகள் மிகப்புகழ்ந்து அரனடிமேல்
அன்ப தாக
தென்புபெறு மகதேவ மாமலையை வலமாகச்
செய்த பேர்க்கு,

பொழிப்பு: மேலும் சூதர்,'தண்ணிய சனிக்கிழமைகள் தோறும் இங்குள்ள சுனைகுளித்து, நீறுபூசி, அழகாக, அன்பு பொருந்திய சிவனுடைய கதைகளைப் புகழ்ச்சியாகப் பேசி, அவனடிமேல் அன்போடு, மகாத்தேவமலையைத் திருவலம் புரிந்தோர்கட்கு நன்மைகள் யாவும் கிடைக்கும்; செல்வ முண்டாகும்; நினை வினை கூடும்' என்றார் என்றவாறு.

53. சீர்பெருகும் மகதேவ மாமலையை வலமாகச்
செல்லும் போது
பேர்பெருகு பெரியோர்கள் தன்னோடும் கூடிமிகப்
பெருமை யான
சேர்பெருகு மிந்தமலை வலம்புரியை ஓதிமிகு
திறமை யான
பார்பெருகு மானிடர்கள் இந்தவகை வலம்புரியப்
பதவி சேர்வார்

பொழிப்பு: மேலும் சூதர், 'சிறப்புமிக்க இம்மாதேவமலை யைத் திருவலஞ் செய்யும்போது யாம்கூறிய இவ்வலம்புரிக் கதையையும், பெரியோர்களுடன் கூடி,ஓதிவலஞ் செய்தார்க்கு சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியப் பதவிகள் கிடைக்கும்' என்றார் என்றவாறு.

54. இந்தவகை மானிடர்கள் பலதானம் செய்துவல
 மினிதாய் வந்தால்
நந்திமிசை ஏறிவரும் நாதனடி பிரியாமல்
 நலமாய் வாழ்வார்
அந்தவகை விட்டடைக்காய் தரித்துகாங் கூப்பாக்
 கையரகு சமாக
வந்தவர்க ளெமபுயத்தில் வாதைபட்டு நாகதனில்
 மலைவா ரென்றார்.

பொழிப்பு: மேலும் சூதர், 'இவ்வாறாக மனிதர் இம்மா தேவ மலையை வலம் புரிந்து வந்தால், நந்தியம்பெருமான் மேல் ஏறும்பெருமானாகிய எம்பெருமானின் திருவடிகளைப் பிரியாமல் என்றும் நன்றாக வாழ்வார்கள்; அவ்வாறன்றி வெற்றிலையுண்டு கைகூப்பாமல் அசுத்தமனத்தராய் இம்மா தேவமலைக்கு வந்தவர்கள் எமபுரத்தில் துன்ப மிகவடைந்து நரகத்தில் நெடுநாள் தவிப்பர்' என்றார் என்றவாறு.

55. இந்தபடி நாமறிந்தோம் என்று சூதர் இனியவலம்
 வருவார்பே றியம்பும்போது
விந்தைபெற நைமிசத்து வாமர் மற்றோர் மிகமகிழ்ந்து
 களிகூர்ந்து விளம்பு வார்கள்
அந்தமிகு மிகபரங்கள் பெரும்பே றெல்லாம் அருள்செவ்
 எனமுனிவ ரகம கிழ்ந்து [வாய்
சிந்தையிலே சத்தியமாய் இகப ரங்கள் செயற்கைதனைக்
 கேளுமெனச் செப்ப லுற்றார்.

பொழிப்பு: பொருள் வெளிப்படை: இனிச்சூதர் இகபர சருக்கம் கூறத் தொடங்கினர் என்க.

மலைவலம் புரிச் சருக்கம் முற்றும்.
ஆக திருவிருத்தம்-485.

# இகபர சருக்கம்.

1. ஆனசித்த யோகமுடன் அமிர்தமெனும்
முகூர்த்தமிட்டு அன்ப தாக
தானதற்குப் பின்னுளில் புனல்படிந்து
உண்டியைநீத் தவமே போக்கி
ஆனைமுகன் பதம்போற்றித் தவம்புரிந்தம்
முகூர்த்தத்தில் அடைவாய்ச் சென்று
வானகத்தோர் தொழுதேத்தும் மகதேவ
மலையினைமூ வலஞ்செய் தேறி.

பொழிப்பு: மேலும் சூதர் கூறுவார்; மானிடர்கள் இக பரம் அடைய வேண்டுமாயின், அமிர்தம், சித்தம் என்ற யோகங்களில் ஒன்றைச் செல்வதற் கேற்ற, நற்காலமாகக் குறித்துக் கொண்டு, அதன் முன்னுள் நீராடி, உணவு நீக்கி, பாவங்களைச் செய்யா தொழிந்து விநாயகனை வணங்கித் தவம் மேற்கொண்டு கழித்து, பின்னர் குறித்த முகூர்த்தத்தில் முறையாகச் சென்று, அம்மகாதேவமலையைத் தொழுது மூவலம் புரிந்து தொழுது செல்க' என்று மேலும் கூறலுற்றார் என்றவாறு.

2. மலைக்காம கோட்டத்தாய் திருத்தாளும் மகதேவர்
மலர்போற் றாளும்
தலைப்பாலு முலைப்பாலு இருக்கவானை சுனைமூழ்கித்
தாழ்ந்து நின்று
சிலைக்காமன் தனையெரித்தார் சன்னதிமூ வலஞ்செய்து
செங்கை கூப்பி
நிலைப்பாலும் சாட்டாங்க மாய்விழுந்து தொழுதெழுந்து
நேய மாக.

பொழிப்பு: மேலும் சூதர் 'அவ்வாறு சென்று மகாதேவர் மலைக் காமாட்சியம்மையின் திருவடிகளையும், எம்பெருமான் திருவடிகளையும் தலையிலும் உள்ளத்திலும் நீங்கா வண்ணம், அங்குள்ள சுனைமூழ்கி, வணங்கி, விநாயகனையும் தாழ்ந்து நின்று, மன்மதனை எரித்த எம்பெருமானின் திருக் கோயிலை மூன்றுமுறை வலஞ்செய்து, கைகூப்பி, நிலையாயுள்ள, அறுவகை யுடலுறுப்புகளும் மண்ணில்படிய வணங்கி அன்பொடு நிற்க' வென்றுமேலும் கூறுவாராயினர் எ-று.

3. வெள்ளிமுதல் நாற்பதுநாள் ஒருபோதாய் புனல்படிந்து
வெண்ணீ றிட்டு [மூத்தோ
தெள்ளியசொல் வாலையெழுத் தொருமூன்று சிவனெ
ரைந்துங் கூட்டி
கள்ளமனத் தினைநீக்கி நித்தம்பதி னாயிரமாய்க்
கருதிக் கொண்டு
உள்ளபடி நாவிலக்கம் உருவேற்ற இகபரம்பெற்
றும்ப ராவர்.

பொழிப்பு: மேலும் சூதர்! பின்னர் அவ்வாறு நின்று வெள்ளிக்கிழமை தொடங்கி நாற்பது நாட்கள்வரை ஒருபோதுண்டியராய், குளித்து, திருவெண்ணீறு பூசி, தெளிந்த மந்திரச் சொல்லாகிய வாலை மந்திரமாகிய, அகரமும் உகரமும் மகரமும் ஆகிய மூன்றுடன், சிவனெழுத்துக்களாகிய, நமசிவய, என்னும் ஐந்தெழுத்துக்களையும் சேர்த்து, இவ்வெழுத்துக்களாகிய சத்திசிவ மந்திரத்தைத் திருட்டெண்ணங்கள் நீக்கி, நாடோறும் பதினாயிரம் முறை உச்சரித்துக் கொண்டேவர, ஓரிலக்க மாயபிறகு, அவ்வாறிருந்த பேர்கள் இகபர முத்திபெற்று தேவர் களாவார்கள்! என்றவாறு.

4. அப்படிப்பின் திரிபுரையீ ரெட்டெழுத்தும்
சிவனெழுத்தோ ரைந்துங் கூட்டி
செப்பமுட னித்தமிரண் டாயிரத்தி
நூறாகச் செபித்து ருக்க
ஒப்புடைய நாற்பதுநாட் கோரிலக்க
மாமந்த உறுவி னாலே
எப்படியும் புகழ்ந்தேத்த இகபரம்பெற்
றும்பரென இருக்க லாமே.

பொழிப்பு: மேலும் சூதர் கூறுவார்: அவ்வாறாக ஆய பின்பு, திரிபுரையின் மந்திரமாகிய, அகரமுதலாகிய பதினாறெழுத்துக்களையும், சிவனெழுத்துக்களாகிய நகர முதலான ஐந்தெழுத்துக்களையும் ஒன்று சேர்த்து, சத்திசிவ மந்திரமாகிய இவ்விருபத்தோரெழுத்துக்களையும் நாடோறும் இரண்டாயிரத்து நூறாக உச்சரிப்பின் நாற்பது நாட்களில் ஓரிலக்கமென்ற எண்ணடையின், எவ்வாறும் தப்பாமல் இகபரமுத்தி பெற்று தேவர்களாகி யிருப்பார்கள்! என்றவாறு.

5. அன்னவகை புவனையெழுத் தொன்றுடனே
சிவனெழுத்தோ ரைந்துங் கூட்டி
பின்னமறத் தினம்பதினை யிரமாக
உருவேற்றி பிராணன் மாற்குச்
சொன்னபடி இருமூன்று லக்கமுற
வாமறிவுத் திருவுந் தோன்றி
இன்னமின்ன மிகபரம்பெற் றும்பரென
இருப்பார்கள் இனிக்க நன்றே.

பொழிப்பு: மேலும் சூதர் கூறுவார்; 'அவ்வாருக உருவெடுத்தபின்னர் புவனேசுவரியின் எழுத்தாகிய அகரம் ஒன்றுடனே, சிவனெழுத்துக்களாகிய ஐந்தெழுத்தையும் ஒன்று கூட்டி இவ்வாரெழுத்துக்களையும் சிவபெருமான் திருமாலுக்குக் கூறியவாறு நாற்பது நாட்களுக்குள் தினந்தோறும் பதினையிரம் உருவேற்றி ஆறுலக்கமாகும் போது, ஞானத்திருதோன்றி, இகபரமுத்தி பெற்று, தேவர்களாகி இனிக்க வாழலாம்' என்ருர் என்றவாறு.

6. அதனினிய பிரணவமோம் முதலா மெழுத்தஞ்சும்
அடைவாய் கூட்டி
இதுவிதியாய் பனிரண்டு லக்கமுற உருவேற்றி
திருவு மேறி
மதுவிரியும் குழலுமையு மகதேவ ரும்பெரிதாய்
மகிழ்ந்து சால
புதுமைபெற விகபரமும் தரவிமையோர் கொண்டாடப்
பொருந்து வாரே.

பொழிப்பு: மேலும் அவர், 'மேலெல்லா வற்றினும் மிக இனியதான, பிரணவமாகிய ஓம் என்றதோடு, நமசிவய வென்ற ஐந்தெழுத்தையுஞ் சேர்த்து, நாற்பது நாட்களுக்குள், பனிரண்டு லக்கமாகும்படி, உருவேற்றி, ஞானத்திரு வடைந்த போது, சத்தியுஞ் சிவனுமாக மலைக்கள்பபுற்றுத் தோன்றி, இகபரம் கொடுத்து தேவர்களெல்லாம் கொண்டாடப் பொன்னுலகம் செல்வார்கள் என்ருர் என்றவாறு.

7. இன்னமொன்று சிவமுதலா மைந்தெழுத்து மிருபத்தைந்
 திலக்க மாக
 சொன்னவர்க ளிகபரமுஞ் சுத்தமுத்தி தானுமுண்டாய்
 துலங்கி வாழ்வர்
 இன்னபரி சரியாதார் அத்தலத்தில் யாவரினும்
 இனிமை கூற
 அன்னமிட வதுசெபமாய் இகபரமும் பெறுவரென
 வரைந்தான் வியாதன்.

பொழிப்பு: மேலும் சூதர், 'இன்னுமோர் வழியுண்டு அதாவது சிவனுடைய ஐந்தெழுத்துக்களையும், நாற்பது நாட்களுக்குள் இருபத்தைந்து லக்கமாகும்படி உருவேற்றினால், இகபரமாகிய சுத்தமுத்தியை அடைந்து வாழ்வார்கள் அன்றியும் இம்மந்திரங்களின் தன்மையறியாதார்கள் அம்மகாதேவ மலையின் கண்ணே அடியார்கட்கு அன்னமிட்டால் அவர்களும் இகபரமுத்தி யடைவார்கள் என்று இவ்வாறாக வியாதனார் திருவாய் மலர்ந்தார்' என்றார் என்றவாறு.

8. சூரிய வாரந் தன்னில் சுனையினில் மூழ்கி யாதி
 பார்புகழ் மலைக்கா மத்தாய் பரனிரு பாதம் போற்றி
 சீருடன் தரிசித் தோர்க்கு செல்வமும் அமரர் வாழ்வும்
 நாரண னறியா நாதன் நன்றிசேர் பாதஞ் சேர்வார்.

பொழிப்பு: ஞாயிற்றுக் கிழமைகளில் அம்மலைச் சுனையில் மூழ்கி, ஆதியாகிய உலகம் புகழும் மலைவடிவாயுள்ள காமாட்சியம்மையும் எம்பெருமானும் ஆகிய இவர்களின் திருவடிகளை வணங்கி சிறப்பாக தரிசனம் செய்தோர்கள், செல்வ வாழ்வுற்று, மறுமையில் தேவர்களின் வாழ்வு பெற்று கைலாயத்தை யடைவார்கள் என்றார் சூதர் என்றவாறு.

9. புகழ்பெறும் சோம வாரம் புனிதனுர் சுனையில் மூழ்கி
மகிழ்வுற கிரியை செய்து மலர்க்கொன்றை மாலே சாற்றி
அகமகிழ் மகதே வர்தாள் அலர்களால் பூசை செய்தால்
சுகமிலாப் பிறவி நீங்கி சுந்தரப் பதவி சேர்வார்.

பொழிப்பு: திங்கட்கிழமை தோறும் வந்து மாதேவ மலே யின் சுனையில் குளித்து, களிப்போடு நேமநிட்டைகளை முடித்து, கொன்றைமாலையை எம்பெருமானுர்க்குச் சூட்டி, மனக்களிப்புமிக்க மகாதேவ மலேயிலுள்ள சிவசத்திகளின் திருவடிகட்குப் பூசைசெய்தால், ஒருபயனுமிலாப் பிறவி நீங்கி, அழகிய சிவபதவிகளைச் சேர்வார்கள் என்று சூதர் கூறினுர் என்றவாறு.

10. மங்கள வார நாளில் மாதவர்
தடத்தில் வீழுய்
அங்கமும் நனைத்துக் கொண்டு அரனையு
முமையாள் தன்னைப்
பொங்கமாய்த் துதித்த பேர்க்குப் புவியிலோர்
துதிக்க வாழ்ந்து
துங்கவெண் ணீறு சாற்றித் தேவராய்த்
கூடி வாழ்வார்

பொழிப்பு: 'செவ்வாய்க் கிழமைகளில் மகாதேவ மலேயி லுள்ள திருமால் சுனையில் உடல் நனையுமாறு குளித்து, சிவ சத்திகளைப் பொலிவுபெற வணங்கியவர்கள், இம்மையில் பூலோகத்தவர் புகழவும், மறுமையில் புனித வெண்ணீறுபூசி தேவர்களோடு கூடியும் வாழ்வார்கள்' என்றுர் சூதர் எ-று.

11. புதனெரு வாரந் தன்னில் புரந்தரன் தடத்தில் மூழ்கி
கெதிபலன் அதிக மாகும் கேசவன் பணியும் வெற்பில்
இதமுடன் பரனைப் போற்ற இன்பநல் பதவிக் கெல்லாம்
முதன்மையா யான தானமூர்த்திதாள் அடைவர் தாமே.

பொழிப்பு: புதன்கிழமைகள் தோறும் தேவேந்
சுனையில் மூழ்கி நற்கதிமிக்க திருமாலும் வணங்கிய மகாதே
மலையில் அன்போடு சிவபெருமானைத் துதித்தவர்கள் இன்ப
பதவிகளில் முதன்மையான சிவபெருமான் தாளில் சேர்வா
கள் என்றவாறு

12. குருவொரு வாரந் தன்னில் குமரர்தன்
தடத்தில் மூழ்கி
அருமறைக் கிறைவன் போற்றும் அரனையும்
பூசை செய்தால்
தருவுறை விண்ணோர்க் கெல்லாம் தலைவனார்
பணிந்து நிற்க
பெருமைசேர் தவத்தோர் வாழ்த்த பெருகதி
யடைவார் தாமே.

2388

பொழிப்பு: 'வியாழக் கிழமைகள் தோறும் மகாதேவ மலையில் கந்தன் சுனையில் மூழ்கி, அயனார் போற்றும் அரனைப் பணிந்து நின்றால், ஐந்தருக்கள் உள்ள தேவலோகத் தரசனாகிய தேவேந்திரனும் பணிந்து நிற்க, தவசிகள் யாவரும் வாழ்த்த, பெருமைப்பட்ட சிவகதியை அடைவார்கள்' என்றார் சூதர் என்றவாறு.

13. சுக்கிர வாரம் தன்னில் சுந்தரி தடத்தில் மூழ்கி
நக்கனுக் கெதிரே வந்து நயந்தவர் முறையே செய்வார்
பக்குவ மாகவே தான் பரமிதன் பூசை செய்தால்
அக்கணம் கயிலை மீதில் அடையலாம் மோட்சந்தானே.

பொழிப்பு: 'வெள்ளிக்கிழமைகள் தோறும் அங்குள்ள பரமேசுவரி சுனையில் குளித்து சிவபெருமானின் எதிரே வந்து, அன்புடன் குறைகூறிக் கொண்டு சத்தி பூசையும் செய்தால் அந்த நேரத்திலேயே கைலாயத்தில் மோட்சத்தில் அடைவார்கள்' என்றார் சூதர் என்றவாறு.

சனிவாரந் தன்னி லேதா மோதிரன் தடத்தில் மூழ்கின்
பனியெனப் பாவம் நீங்கும் பரகதி எளிதி லாகும்
மனமது மகிழ வேதான் மகதேவ உமையாள் தம்மை
புனிதமாய்ப் பூசை செய்தால் புனிதனூர் பதவி சேர்வார்.

பொழிப்பு: 'சனிக்கிழமைகள் தோறும் அங்குள்ள திருமால் சுனையில் மூழ்கினல், பனிபோல் பாவம் நீங்கும்; மேலான முத்தி எளிதிலாகும்; மனமகிழ்ந்து சத்திசிவன்களைப் பூசித்தால் தூயகயிலாயத்தை சேர்வார்கள் என்றூர் சூதர் எ--று.

15. சீர்மேவு மகதேவ மலைஏறி ஆலயத்தில்
திறம தாக
கார்மேவு குழலாலை கனகவல்லி பரமசிவ
காமி மிக்க
வார்மேவு முலையாளை மலைக்காம கோட்டித்தாய்
மலர்ததாள் போற்றி
பார்மேவும் பத்தர்களும் சித்தர்களும் இகபரங்கள்
பலித்து வாழ்வார்

பொழிப்பு: 'சிறப்புப் பொருந்திய மாதேவமலையில் ஏறி, ஆங்குள்ள ஆலயத்தில், வண்மையயுண்டாக மேகம்போற் கருத்த கூந்தலுடையாளாகிய உமையை, பொற்கொடியாளை, மேலான சிவகாமியை, கச்சணிந்த முலையாளாகிய பார்வதியை காமாட்சியம்மையைப் பணிந்து அவளின் திருவடிகளைத் துதித்த பத்தரும் சித்தரும் இகபரம் பெறுவார்கள்' என்றூர் சூதர் என்றவாறு,

16. பூமியில் வாழ்ந்திருந்தும் புலவர்கள் புழ்ந்துயர்ந்தும்
தாமரைக் கண்ணனும் சதுர்முகனுங் காண
மாமலர்க் குழலி பாகர் மலர்ப்பதம் பணிந்து நின்றூர்
தாமுங்கை லாசஞ் சென்று சார்வரென் றனைத்தார் சூதர்

பொழிப்பு: திருமாலும் பிரம்மாவும் காண்பதற்கரிய உமை பாகரின் திருவடிகளைப் பணிந்து புகழ்ந்தவர்கள், இம்மையில் நன்றாக வாழ்ந்தும், புலவர்களால் புகழ்ந்து உயர்ந்தும், மறுமையில் கைலாய பதவியைச் சார்வா' ரென்று சூதர் கூறினர் என்றவாறு.

17. என்றுபின் சூதர் தாமும் இகபரம்
 பெறுவா ரோத
நன்றென மகிழ்ந்தி ருந்தார் நைமிச
 முனிவ ரெல்லாம்
என்றுமிச் சரிதந் தன்னை எழிச்சியாய்ச்
 சொல்வோர் கேட்போர்
மன்றுளா னருகில் வாழ்வர் மகிலந்
 தன்னில் மாதோ

பொழிப்பு: பொருள் வெளிப்படை: இச்சரித்திரத்தை எக்காலத்தும் சொல்வோரும், கெட்போருள மன்றுள் நடனமாடியவனின் திருவருளால் மாநிலத்தே வாழ்வார்கள் என்றபடி.

18. மலைக்காம கோட்டத் தாயும் மகதேவ னும் வாழ்க
கலைச்சேவற் கொடி னும் கணபதி யாரும் வாழ்க.
மலைப்பொதி யத்தில் வாழும் மா முனி கும்பன் வாழ்க
நிலைமக தேவர் ஆடல் நிகழ்த்துமிப் புராணம் வாழ்க.

19. அய்யனர் மகதே வர்தாள் அனுதினம்
 போற்றி செய்தோர்
மெய்யரைக் கண்டோர் வாழ்க விண்ணுளோர்
 தாமும் வாழ்க
தையலார் அடியார் வாழ்க தமிழ்வாணர்
 தாமும் வாழ்க
செய்யவிப் புராணந் தன்னை செப்பினர்
 தாமும் வாழ்க.

தையலார்-உமையம்மை.

வேத மோதிடு வேதியர் தானிகர்
மாத வத்தை யடைந்தவர் வாழியே
நீதி யாகிய சைவ நெறிகளும்
நீத கற்றமிழ் மூவரும் வாழியே.

21. ஆலயந் தன்னை நோக்கி அஞ்சலி செய்தோர் வாழி
வேலைசூழ் புவியுள் ளோரும் வேந்தர்நீ திகளும் வாழி
மேலதாய் புராணந் தன்னை விழியினல் பார்த்தோர் வாழி
சீலமாம் சிவனைப் போற்றும் சிவனடி யாரும் வாழி

22. சீர்மி குந்த திருவும் விளங்கவே
தாரணி தன்னில் தருமந் தழைக்கவே
காரு மாதமும் மாரி தருகவே
பேறு பெற்ற பிரானரு வாழி.

இகபரச் சருக்கம்-முற்றும்.

ஆகதிரு விருத்தம்—507.

109758
Q23:417
N55

சக்கிர வர்த்தி பிரஸ் சென்னை-1.